# கணிதம்

## வகுப்பு - I

## பாகம் - 1

Mathematics
Part - 1
Tamil Medium

கேரள அரசு
கல்வித்துறை
2015

தயாரிப்பு
மாநிலக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

JT 345-1/Maths 1(T)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# கணிதம்

பகுதி **1**

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab

First Edition : 2014, Reprint : 2015

© Government of Kerala • Department of Education • 2014

அன்புள்ள குழந்தைகளே,

கற்கண்டாக இனிக்கும் வண்ணம் இக்கணிதப் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள பெரும்பாலான செயல்பாடுகள் ஆசிரியரின் உதவியோடு செய்ய வேண்டியவைகளாகும். சுற்றுப்புறத்திலிருந்து கிடைக்கும் அனுபவங்கள் வாயிலாகப் பெறவேண்டிய கணிதக் கருத்துகள் இப்பாடநூலில் மலர்மாலையாகப் பின்னப் பட்டுள்ளது.

விளையாடியும் உற்றுநோக்கியும் பரிசோதித்தும் அக்கணிதக்கருத்துக்கள் உருவாக வாய்ப்பளிக்க வேண்டும்.

வாழ்த்துகளுடன்....

முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

## Text book Committee

**Ajeeshkumar.T.B**
HSA, GHS, Mannamkandam. Idukki.

**Karmali.P.A**
LPSA, HFAS BS, Kumbala.

**P.P.Prabakaran Nair**
HSA (Rtd), Palora High School, Kozhikode.

**Bareesh.V.P**
AMLPS, Farook, Kozhikod.

**Manoj. T.N**
HSA, GMHS, Palakuzha. Eranakulam

**K.R. Muraleedharan Pillai**
Senior Lect., DIET, Kollam.

**Muhammed Abdulla.K.M**
Govt Boys HSS, Manjeri. Malappuram.

**Sasidharan.V.P**
PD Teacher, GHSS, Ravaneshwaram. Kasarkod.

**Sree kumar.C.G**
PD Teacher, Govt.Co-operative LPS, Irumpanangad. Kollam.

**C.V. Sajeevan**
Kariyil ALPS, Thuruthi, Kasarkod.

**Habeeb Rahman**
HSA, GHS, Irumpuzhi. Malappuram.

### Experts

**Venugopal.C**
Asst.Professor, Govt College of Teacher Education, Thiruvananthapuram.

**Dr. Sunny Lukose**
Deputy Director of Collegiat Education(Rtd), Ernakulam.

### Artist

**Aseesh.K.S**
DEO Office, Muvattupuzha.

**Kunjuraman.PC**
DIET, Ernakulam.

**Jijeesh.P.B**
RDTE, Kothamangalam.

**Rakesh**
Neyyar Dam, Thiruvananthapuram.

**Harikumar.K.B**
Kazhakoottam, Thiruvananthapuram.

**Hari charutha**
Nemom, Thiruvananthapuram.

### Academic Co-ordinator

**Dr. Lidson Raj J, Research Officer, SCERT.**

### Tamil Version

**Babu.S**
PD Teacher, GLPS, Devikulam. Idukki.

**Dr. M.Nainar**
Professor (Rtd), University College, Thiruvananthapuram.

**Robert Xavier.M.**
Headmaster, ALPS, Attempathy. Palakad.


### Academic Co-ordinator


**Dr. Sahaya Dhas D, Research Officer, SCERT.**

State Council Of Education Reasearch and Training (SCERT)
Vidhya Bhavan, Poojapura. Thiruvananthapuram. 695012.

## உள்ளடக்கம்


1. அகிலாவின் வீடு ..................... 6
2. குமரனின் குறும்புகள் ........... 16
3. கலைவாணனின் கனவு ........ 28
4. பூப்பறிக்க வாருங்கள் ........... 35
5. எண்ணி எடுக்கலாம்!............. 59





# 1 அகிலாவின் வீடு








படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?

அகிலாவைப் பார்க்கத் தோழிகள் பாலாவும் மாலாவும் வந்தார்கள். இருவரும் வீட்டைச் சுற்றிப் பார்த்தனர்.






| | | |
|---|---|---|
| பெரியது எது?<br>✓ அடையாளமிடுங்கள். |  |  |






| | | |
|---|---|---|
| உள்ளே யார்?<br>✓ அடையாளமிடுங்கள். |  |  |




| | | |
|---|---|---|
| கீழே இருப்பது எது?<br>✓ அடையாளமிடுங்கள். |  |  |




| | | |
|---|---|---|
| உயரமானதிற்கு<br>✓ அடையாளமிடுங்கள். |  |  |




| | | |
|---|---|---|
| எந்தச் செடியில் பூக்கள் குறைவு? ✓ அடையாளமிடுங்கள். |  |  |

## யார் முன்னே? யார் பின்னே?

மாலா முன்னால் நடந்தாள். அவள் பின்னால் பாலா நடந்தாள். இருவரும் தோட்டத்தின் வழியாகக் குளத்தை நோக்கி நடந்தார்கள்.





| | | |
|---|---|---|
| மாலாவின் இடதுபக்கத்தில் உள்ளதற்கு ✓ அடையாளமிடுங்கள் |  |  |





| | | |
|---|---|---|
| அருகில் இருப்பது எது?<br>✓ அடையாளமிடுங்கள். |  |  |

மாலாவும் பாலாவும் வீட்டிற்கு வந்தார்கள். அகிலாவின் பிறந்தநாளுக்குச் செய்த தின்பண்டங்களை அம்மா தந்தார்கள்.



யாருடைய தட்டில் கூடுதல் தின்பண்டங்கள்?

✓ அடையாளமிடுங்கள்.






சிறிய பொம்மைக்கு வண்ணம் கொடுங்கள்.



பெட்டியின் மேலே இருக்கும் பூனைக்கு வண்ணம் தீட்டுங்கள்.



அகிலாவின் முன்னால் இருக்கும் பூனைக்கு வண்ணம் தீட்டுங்கள்.

சிறியது எது? வட்டமிடுங்கள்.



தூரத்தில் உள்ள மரம் எது? வட்டமிடுங்கள்.



உள்ளே? வெளியே?
வெளியே உள்ளவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்.





# 2 குமரனின் குறும்புகள்




எத்தனை எத்தனை குழுக்கள்?




ஒரு மரத்தில்
இரண்டு குருவிகள்
கூடு கட்டின.
ஓர் அழகான
கூடு.
பெண் குருவி
முட்டையிட்டது.
ஒன்று, இரண்டு, மூன்று.
மூன்று முட்டைகள்.
மூன்று
முட்டைகளும் விரிந்தன.
மூன்றும் சிறிய குருவிக்
குஞ்சுகள்!
அம்மா
வந்துட்டாங்க...
ஹாய்...
நான்கு
நெற்கதிர்கள்!


அம்மா... கீழே பாருங்கள். கீழே ஐந்து பேர் நிற்கிறார்கள்.
எனக்கு இரண்டு குருவிக் குஞ்சுகள் வேண்டும்.
அம்மா, பயமாக இருக்கிறது.
குமரா... எனக்கு ஒன்று.
உன்னை நான் என்ன செய்கிறேன் பார்?
ஐயோ!
தொப்!
அப்பாடா.. தப்பித்தோம்!



# பாட்டு பாடுவோம்!



ஒன்று... ஒன்று... ஒன்று.

யானைக்குத் தும்பிக்கை ஒன்றாகும்.

இரண்டு...இரண்டு... இரண்டு.

காளைக்குக் கொம்புகள் இரண்டாகும்.

மூன்று... மூன்று...மூன்று.

தேங்காய்க்குக் கண்கள் மூன்றாகும்.


நான்கு... நான்கு... நான்கு.


பூனைக்குக் கால்கள் நான்காகும்.

ஐந்து... ஐந்து... ஐந்து.

ஒரு கை விரல்கள் ஐந்தாகும்.







# பூந்தோட்டத்திற்குச் செல்வோம்




ஒரேபோல் எண்ணிக்கையுள்ள பூக்கள் எவை?

அவற்றிக்கு ஒரே வண்ணம் தீட்டுங்கள்.

# பூந்தோட்ட நண்பர்கள்.

எண்ணிக்கைக்கு ஏற்பப் பொட்டு வரையுங்கள்.

| | |
|---|---|
|  |  |
|  | |
|  | |
|  | |
|  | |

# எண்ணிப் பூக்கள் கொண்டு வா.....!



ஒன்று என்று சொல்வேன்.

ஒரு பூ கொண்டு வா.....!

இரண்டு என்று சொல்வேன்.

இரண்டு பூக்கள் கொண்டு வா.....!

மூன்று என்று சொல்வேன்.

மூன்று பூக்கள் கொண்டு வா.....!

நான்கு என்று சொல்வேன்.

நான்கு பூக்கள் கொண்டு வா.....!

ஐந்து என்று சொல்வேன்.


ஐந்து பூக்கள் கொண்டு வா.....!

எண்ணை நானும் சொல்லவே


எண்ணிப் பூக்கள் கொண்டு வா.....!

# மாமரத்தின் நண்பர்கள்





மாம்பழங்களும் நான்கு.
நாங்களும் 4 பேர்.



மாம்பழம் ஒன்று.
நான் 1.



மாம்பழங்களும் மூன்று.
நாங்களும் 3 பேர்.




மாம்பழங்களும் இரண்டு.
நாங்களும் 2 பேர்.



மாம்பழங்களும் ஐந்து.
நாங்களும் 5 பேர்.

# எண்ணிப்பாருங்கள்.

எண்களைப் பொருத்துங்கள்.



1


2

3

4

5

# எண்ணிப் பார்த்து எண்களை எழுதுங்கள்.



# சரி பார்ப்போம்.

சிலேட்டில் எழுதியுள்ள பொருள்களின் எண்ணிக்கையைப் பாருங்கள். அத்தனை பொருள்கள் அலமாரியில் உள்ளனவா? குறைவாக இருப்பவற்றிற்கு நேராக குமரனின் சிலேட்டில் அடையாளமிடவும்.




அலமாரியில் இருப்பவை எத்தனை?


| | |
|---|---|
| பானை | |
| கரண்டி | |
| கப் | |
| தம்ளர் | |
| பாத்திரம் | |


## எண்ணிப் பாருங்கள்; எழுதுங்கள்.











# 3 கலைவாணனின் கனவு


விளையாட யாரும்வரவில்லையே! மழை வரும்போல் இருக்கிறதே!
சற்று நேரம் இந்த மரத்தடியில் ஓய்வு எடுக்கலாம்.
ஆறு நண்பர்களும் ஆற்றில் குளித்துவிட்டு வருகிறார்களே!
அதோ.. அங்கே ஒன்பது பேர் பாட்டுப் பாடி ஆடுகிறார்கள்.






ஒரு குடம் தண்ணி ஊற்றி
ஒரு பூ பூத்தது.

இரண்டு குடம் தண்ணி ஊற்றி
இரண்டு பூ பூத்தது.

மூன்று குடம் தண்ணி ஊற்றி
மூன்று பூ பூத்தது.

நான்கு குடம் தண்ணி ஊற்றி
நான்கு பூ பூத்தது.

ஐந்து குடம் தண்ணி ஊற்றி
ஐந்து பூ பூத்தது.

ஆறு குடம் தண்ணி ஊற்றி
ஆறு பூ பூத்தது.

ஏழு குடம் தண்ணி ஊற்றி
ஏழு பூ பூத்தது.

எட்டு குடம் தண்ணி ஊற்றி
எட்டு பூ பூத்தது.


ஒன்பது குடம் தண்ணி ஊற்றி
ஒன்பது பூ பூத்தது.


ஆறுபேர் இருக்கிறார்கள்.
6 நெல்லிக்காய் இருக்கிறது.
எல்லோருக்கும் நெல்லிக்காய் கொடுக்கலாம்.
ஏழுபேருக்கு 7 நெல்லிக்காய் இருக்கிறது.
எட்டுபேருக்கு 8 நெல்லிக்காய் இருக்கிறது.
அதோ ஒன்பது பேர் ! 9 நெல்லிக்காயும் இருக்கிறது.



ஐயோ...!
நண்பர்கள் எங்கே? ஹாய்... நெல்லிக்காய்.
6
7


# எண்ணுவோம்... எழுதுவோம்.





















## மறைந்திருப்பது எது?






வண்டி மறைத்துள்ள இரண்டு பூச்சட்டிகள்.
அவற்றில் உள்ள எண்கள் எவை?

## ஒளிந்திருப்பது யார்?


1 முதல் 9 வரையுள்ள புள்ளிகளை இணைத்துப் பாருங்கள்.



# எண்ணி எழுதுவோம்!



மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். அதில் கீழே உள்ள ஒவ்வொன்றின் எண்ணிக்கையையும் கண்டுபிடித்து எழுதுங்கள்.





இவற்றில் மிகப் பெரிய எண் எது?

சிறிய எண் எது?

# 4 பூப்பறிக்க வாருங்கள்

மாதவனும் மாதவியும் பூப்பறிக்கச் சென்றார்கள்.





பூந்தோட்டம் நிறைய பூக்கள்.

அப்பூக்களில் தேன்குடிக்கும் குருவிகளும் இருந்தன.


குருவிகளைப் பார்த்ததும் பதுங்கிப் பதுங்கிச் சென்றார்கள்.



குருவிகள் பறந்தன.

ஒரு மரக்கிளையில் அமர்ந்தன.

கிளை முழுவதும் குருவிகள்.



மாதவனும் மாதவியும் பூக்களைப் பறித்தார்கள்.

கூடை நிறைய பூக்களுடன் வீட்டிற்குச் சென்றார்கள்.





## மாதவன் பறித்த பூக்கள் :

ரோஜா ☐ செம்பருத்தி ☐ செவ்வந்தி ☐

## மாதவி பறித்த பூக்கள் :


ரோஜா ☐ செம்பருத்தி ☐ செவ்வந்தி ☐




இருவரும் தங்களுக்குக் கிடைத்த பூக்களை ஒன்றாகச் சேர்த்தார்கள்.
ஒவ்வொரு வகையிலும் எத்தனை பூக்கள்?

| | மாதவன் | மாதவி | மொத்தம் |
|---|---|---|---|
| ரோஜா | | | |
| செம்பருத்தி | | | |
| செவ்வந்தி | | | |

மிகவும் அதிகமாக உள்ள பூ எது?
✓ அடையாளமிடுங்கள்.



மிகவும் குறைவாக உள்ள பூ எது?
✓ அடையாளமிடுங்கள்.





# பூக்கோலம்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
மல்லிகைப் பூக்கள் இரண்டு.
இரண்டும் ஒன்றும் மூன்று
கொன்றைப் பூக்கள் மூன்று.
மூன்றும் ஒன்றும் நான்கு
முல்லைப் பூக்கள் நான்கு.
நான்கும் ஒன்றும் ஐந்து
பிச்சிப் பூக்கள் ஐந்து.
ஐந்தும் ஒன்றும் ஆறு
ஆம்பல் பூக்கள் ஆறு.






ஆறும் ஒன்றும் ஏழு
தாழம் பூக்கள் ஏழு.
ஏழும் ஒன்றும் எட்டு
ரோஜாப் பூக்கள் எட்டு.
எட்டும் ஒன்றும் ஒன்பது
தும்பைப் பூக்கள் ஒன்பது.
ஒன்பதும் ஒன்றும் பத்து
தெற்றிப் பூக்கள் பத்து.
ஒன்றாய் நாங்கள் சேர்ந்து
நன்றாய்அமைத்தோம் பூக்கோலம்.



JT 345-4/Maths 1(T)


## வண்ணம் தீட்டுவோம்!



# நண்பர்கள் ஒன்று சேர்ந்தபொழுது...




மாதவனும் நண்பர்களும் விளையாடப் போனார்கள்.



மொத்தம் எத்தனை பேர்? ☐

# இணைப்போம்!

இரண்டு குழுக்களை இணைத்தால் மொத்தம் 6 கிடைக்க வேண்டும். எந்தெந்தக் குழுக்களை இணைக்கலாம்? இணைத்துப் பாருங்கள்.



இணைத்த குழுக்களின் மஞ்சாடி முத்துக்கள் சேர்ந்தால்...?

3 + 3 = ☐

☐ + ☐ = ☐

☐ + ☐ = ☐

# எவ்வாறெல்லாம்?

மஞ்சாடி முத்துக்களை இரண்டு குழுக்களாக்குங்கள்.
எண்ணிக்கையை கட்டங்களில் எழுதுங்கள்.



| | | | | |
|---|---|---|---|---|
| 3 | + | 4 | = | 7 |
| | + | | = | 7 |
| | + | | = | 7 |




| | | | | |
|---|---|---|---|---|
| | + | | = | 5 |
| | + | | = | 5 |
| | + | | = | 5 |



| | | | | |
|---|---|---|---|---|
| | + | | = | 9 |
| | + | | = | 9 |
| | + | | = | 9 |

## கையில் எத்தனை?

ஒரு தட்டில் 9 மஞ்சாடி முத்துக்கள் இருந்தன.
லதா அதிலிருந்து கொஞ்சம் அள்ளி எடுத்தாள்.
இனித் தட்டில் உள்ளது எத்தனை? ☐





லதாவின் கையில் உள்ளது எத்தனை?

☐

## நீங்கள் விளையாடிப் பாருங்கள்.


ஒவ்வொரு விளையாட்டிற்குப் பிறகும் எண்ணிக்கையை எழுதுங்கள்.

| தட்டில் | அள்ளியது |
|---|---|
| 5 | |
| 2 | |
| 1 | |
| | |
| | |
| | |
| | |

# ஒளிந்திருப்பது யார்?


| | |
|---|---|
| 4 + 3 = 7 | 3 + 1 = ☐ |
| 2 + 2 = ☐ | 4 + 1 = ☐ |
| 5 + 1 = ☐ | 2 + 4 = ☐ |
| 2 + 3 = ☐ | 6 + 3 = ☐ |

கணிதச் செயல்பாடுகளைச் செய்யுங்கள்.
விடையாக வரும் எண்களை படத்தில் கண்டுபிடியுங்கள்.
வண்ணம் தீட்டுங்கள்.



மாதவனும் நண்பர்களும் ஊர் சுற்றப் போனார்கள்.

## பெட்டி இரயில்!




5 பேர் ஆக இனி எத்தனை பேர் வேண்டும்? எழுதுங்கள்.

# படகில் ஏறுவோம்!




படகில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ☐

படகில் இனி எத்தனை பேர் ஏறலாம்? ☐


9 – 4 = ☐

# துடுப்பில் உள்ள எண்கள்...

கடற்கரையில் ஒரு படகு.

அதில் துடுப்புகள் உள்ளன.

விடுபட்ட எண்களை துடுப்புகளில் எழுதுங்கள்.



# பாட்டியும் சுட்டிப்பூனையும்...



பாட்டி 5 வடைகள் சுட்டார்.



பாட்டி வெளியே சென்றார்.



வடையின் மணம் சுட்டிப் பூனையின் மூக்கைத் துளைத்தது.



அது பதுங்கிப் பதுங்கி
சமையலறைக்கு வந்தது.
வீட்டில் யாருமில்லை.
ஒரு வடையைக் கடித்தது.
“ஹாய்! நல்ல ருசி!”

சுட்டிப்பூனை மேலும் ஒரு வடையைக் கடித்தது.

ஏதோ ஒரு சத்தம் கேட்டது.

சுட்டிப்பூனை ஓடி மறைந்தது.



பாட்டி திரும்பி வந்து
பார்த்த பொழுது . . . ?



பாட்டி சுட்ட மொத்த வடைகள் எத்தனை?

சுட்டிப்பூனை தின்ற வடைகள் எத்தனை?


மீதி வடைகள் எத்தனை?

# கட்டங்களை நிரப்புவோம்!




8 - 3 = □






5 - 2 = □

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | - | 2 | = | □ |
| 5 | - | □ | = | 3 |
| 9 | - | □ | = | 8 |

# பணியாரம்...



தட்டிலுள்ள பணியாரம்
அம்மா சுட்ட பணியாரம் 5



அகிலா தின்றாள் ஒன்று
தட்டில் எத்தனை பணியாரம்?

முகிலன் தின்றான் ஒன்று
தட்டில் எத்தனை பணியாரம்?



அப்பா தின்றார் ஒன்று
தட்டில் எத்தனை பணியாரம்?

பாட்டி தின்றார் ஒன்று
தட்டில் எத்தனை பணியாரம்?



அம்மா தின்றார் ஒன்று
தட்டு மொத்தம் காலி
தட்டில் உள்ள பணியாரம்? 0



# திருவிழா...



திருவிழாவன்று அம்மா கவிதாவிற்கு 8 வளையல்கள் வாங்கிக் கொடுத்தார். கவிதாவிற்கு இரண்டு கைகளிலும் போட ஆசை.

இடது கையில் 3 வளையல்கள் போட்டாள். வலது கையில் எத்தனை வளையல்கள் போடுவாள்? ☐

கவிதா வேறு என்னென்ன முறைகளில் வளையல்களைப் போட முடியும்?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இடது கையில் | | | | | | |
| வலது கையில் | | | | | | |

கீதாவிற்கு 7 மிட்டாய்கள் கிடைத்தன. பாலுவிற்கு 2 மிட்டாய்கள் கொடுத்தாள்.

முகமதுவிற்கு 2 மிட்டாய்கள் கொடுத்தாள்.

கீதாவின் கையில் மீதி எத்தனை மிட்டாய்கள் உள்ளன? ☐




# வழி கண்டுபிடியுங்கள்.

முயல் காரட் தோட்டத்திற்குச் செல்ல வேண்டும்.

வழி காட்டுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள செயல்பாடுகளைச் செய்து பாருங்கள்.

விடையல்லாத ஒரு வாசலைத் திறக்க முடியும்.




8 − 4 = ☐

6 + 3 = ☐

6 − 3 = ☐



7 + 2 = ☐

2 + 4 = ☐

5 − 3 = ☐

JT 345-5/Maths 1(T)


# நண்பன் யார்?

கணிதச் செயல்பாடுகளைச் செய்து பாருங்கள்.

விடையாக வரும் எண்ணுடன் பொருத்துங்கள்.

யார் யாருடைய நண்பன் எனத் தெரியும்.



# 5 எண்ணி எடுக்கலாம்!

படத்தைப் பாருங்கள்.

கதை சொல்லுங்கள்.



மைதானத்தில் எத்தனை குழந்தைகள் உள்ளனர்? ☐


வானத்தில் எத்தனை குருவிகள் பறக்கின்றன? ☐

மாமரத்தில் எத்தனை குருவிகள் இருக்கின்றன? ☐

குளத்தில் எத்தனை மீன்கள் உள்ளன? ☐


எத்தனை வீடுகள் உள்ளன? ☐

## கோழியும் கோழிக்குஞ்சுகளும்.




நான் பத்து முட்டைகள் இட்டேன்.

பத்தும் விரிந்தன.



பத்துக் குஞ்சுகள் வந்தன.





பத்து ........... பத்து..........
இரண்டு கை விரல்கள்
பத்து!

முகிலன் பார்த்த பத்துகள்







## குழுக்களாக்கலாம்!

மாலா விளையாடுவதற்காகக் கொஞ்சம் கம்புகளை எடுத்தாள்.





முகிலன் அவற்றை ஒரு கட்டாகக் கட்டினான்.

மஞ்சாடி முத்துகள், கம்புகள், கற்கள், இலைகள், பூக்கள் போன்றவை சேகரித்துப் பத்து வீதமுள்ள குழுக்களாக்குங்கள்.




## மிட்டாய்


டாய்...டாய்... மிட்டாய்
நல்ல நல்ல மிட்டாயாம்
நாவில் போட்டால் இனிக்குமாம்
நாளும் வாங்கித் தின்னலாம்.

மாமா மிட்டாய் வாங்கினார்.



மாலா தாளைப் பிரித்தாள்.






10



# மஞ்சாடி விளையாட்டு.

குழந்தைகள் மஞ்சாடி முத்துகளை வைத்து விளையாடத் தொடங்கினார்கள்.

மாலா பத்திற்குக் குறைவான மஞ்சாடி முத்துகளைக் கட்டத்தில் வைத்தாள்.

பத்து ஆவதற்கான மஞ்சாடி முத்துகளைக் காலியான கட்டத்தில் பாலு வைக்க வேண்டும்.


அவர்களுக்குக் கிடைத்த மஞ்சாடி முத்துகளின் எண்ணிக்கையைக் கட்டத்தில் எழுதுங்கள்.

| மாலா | | பாலு | | |
|---|---|---|---|---|
| 6 | + | | = | 10 |
| | + | 7 | = | 10 |
| | + | | = | 10 |
| | + | | = | 10 |
| | + | | = | 10 |

# எத்தனை பென்சில்கள்?


மாலாவிற்கு அவளுடைய தாத்தா ஒரு வண்ணப்பென்சில் பெட்டியைப் பரிசாகத் தந்தார். அவளது கையில் முன்னரே இரண்டு பென்சில்கள் இருந்தன.





பன்னிரண்டை இப்படி எழுதலாம் **12**

# எண்ணிப் பாருங்கள்!





| பத்தும் | | நான்கும் | | பதினான்கு |
|---|---|---|---|---|
| 10 | + | 4 | = | 14 |


# விடுபட்டவற்றை நிரப்பவும்.






பத்தும் மூன்றும் பதிமூன்று


| 10 | + | | = | 13 |






பத்தும் ஐந்தும் பதினைந்து

| | + | | = | |



பத்தும் ஆறும் பதினாறு

☐ + ☐ = 16



பத்தும் ஏழும் பதினேழு


☐ + ☐ = 17






பத்தும் ஒன்பதும் பத்தொன்பது


☐ + ☐ = 19





பத்தும் எட்டும் பதினெட்டு

☐ + ☐ = ☐






பத்தும் ஒன்றும் பதினொன்று


☐ + ☐ = 11



இரயில் பெட்டிகளிலுள்ள எண்களை வரிசையாக எழுதுங்கள்.





பொட்டுகளை எண்ணுங்கள். எண்களுடன் கோடிட்டுப் பொருத்துங்கள்.




மாலா மாலை கட்ட விரும்பினாள்.

முத்துகளை எண்ணிக் கூறுங்கள்; எழுதுங்கள்.





எண்களை வரிசையாக இணைத்துப் படத்தை முழுமையாக்குங்கள்.




# விடுபட்டதை நிரப்பவும்.




அட்டையில் உள்ள எண்களை வரிசையாகக் கட்டங்களில் எழுதுங்கள்.




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

